செய்தி வெளியீடு எண் : 308
நாள் : 24/5/17

# செய்திக் குறிப்பு

குறுந் தொழில் முனைவோர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு
பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய தொழிற் கடன் (PMEGP)

******

பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் 7 லட்சம் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டில் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினையும் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தினையும் ஒருங்கிணைத்து 2008 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாளில் பாரத பிரதமரால் இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம் மூலம் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டத்தில் உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்ச கடனாக ருபாய் 25 இலட்சமும், சேவை சார்ந்த தொழில்களுக்கு அதிக பட்சமாக ருபாய் 10 இலட்சமும் பெறலாம். உற்பத்தி தொடர்பான திட்டத் தொகை ருபாய் 10 லட்சத்திற்கு மேல் மற்றும் சேவை தொழில் தொடர்பான திட்டத் தொகை ருபாய் 5 லட்சத்திற்கு மேல் இருப்பின் அத்தகைய தொழில்களுக்கு கடனுதவி பெறுபவர்களின் கல்வித் தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும், வயது வரம்பு 18 நிரம்பியவராக இருத்தல் வேண்டும். கடனுதவி பெற ஆண்டு வருமான உச்ச வரம்பு கிடையாது.

இத்திட்டத்தின் கீழ் தனிநபர் தொழில் முனைவோர்கள், உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், அறக்கட்டளைகள் ஆகியோர் பயன் பெறலாம். பொதுப் பிரிவினர் நகர் புறத்தில் தொழில் துவக்கும்பட்சத்தில் அவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் துவங்கும் தொழில்களுக்கு 15 சதவிகிதம் மானியமும், ஊரகப் பகுதியில் தொழில் துவக்கும்பட்சத்தில் 25 சதவிகிதம் மானியமும் வழங்கப்படும். சிறப்பு பிரிவினர்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நகர் புறத்தில் தொழில் துவக்கும்பட்சத்தில் அவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம் மானியமும், ஊரகப் பகுதியில் தொழில் துவக்கும்பட்சத்தில் திட்ட மதிப்பீட்டில் 35 சதவிகிதம் மானியமும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் கடன் பெற விரும்புவோர் இளையதளம் முகவரி http://www.kviconline.gov.in/pmegp/ விண்ணப்பித்து அதன் நகலை இணைப்புகளோடு வேலூர் காங்கேயநல்லூர் ரோட்டில் அமைந்து உள்ள பொது மேலாளர், மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.S.A. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

7/5/11

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம், வேலூர்.

7/5/11

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

வேலூர் - 9.